**සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව**
**சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்**
**Sabaragamuwa Provincial Department of Education**

| | |
|---|---|
| **පෙරහුරු පරීක්ෂණය** - 2022 | **11 ශ්‍රේණිය** |
| **முற் சோதனை - 2022** | **தரம் 11** |
| **Practice Tsest – 2022** | **Grade 11** |

| | |
|---|---|
| **දෙමළ භාෂාව හා සාහිත්‍යය - I** | **පැය 01 යි** |
| **தமிழ் மொழியும் இலக்கியமும் - I** | **01 மணித்தியாலம்** |
| **Tamil Language & Literature - I** | **01 Hours** |

**கவனிக்க :**

**(I)** வினாத்தாள் இற்குரிய புள்ளிகள் 40 ஆகும்.

**(II)** 01 தொடக்கம் 40 வரையுள்ள வினா ஒவ்வொன்றிலும் என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

**(III)** உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (**X**) இடுக.

- **தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01. "கைவீரக் களிறு அனைய காளை இவன்" இங்கு **களிறு** என்பது

(1) சிங்கம் (2) ஆண் யானை (3) குதிரை (4) யானை

02. "புலங்களோடு கரணமும் ஆவியும்…." இங்கு **ஆவி** என்பது

(1) உயிர் (2) உடல் (3) தலை (4) சரீரம்

03. பெற்றோரை ஏமாற்றி களவாக ஓடி வந்த காதலியைக் கண்டது போல ஆசை தீர பார்த்துக்கொண்டே இருந்தேன். இங்கு **ஆசை** என்பதன் எதிர்கருத்து

(1) பேராசை (2) விருப்பம் (3) ஆனந்தம் (4) நிராசை

04. "ஈர்ந்து இன்புறூஉம் இளையோர் போல்" இங்கு **இளையோர்** என்பதன் எதிர்பதம்

(1) முதியோர் (2) இளைஞர் (3) வாலிபன் (4) அறிஞர்

05. உன்னிப்பாக அவவைப் பார்க்கத் தொடங்கினேன். இங்கு **உன்னிப்பாக** என்பதன் பொருள்

(1) மிகச் சரியாக (2) மிகக் கவனமாக (3) மேலோட்டமாக (4) சாடையாக

- **பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

06. பின்வருவனவற்றுள் **தொடர்பற்ற** சொற்களின் இணைப்பு

(1) களிறு - பிடி (2) நரி - பாட்டி
(3) கலை - பிணா (4) பரி - குண்டு

07. பொருளால் **வேறுபட்ட** சொற்களைக் கொண்ட தொகுதி

(1) கடல், ஆழி, பரவை (2) வரை, மலை, மூங்கில்
(3) கலம், ஆபரணம், அணி (4) திங்கள், மாதம், கிழமை

08. லொஜிக் (**Logic**) என்பதற்கு நிகரான தமிழாக்கம்

(1) முரண்பாடு (2) தர்க்கம் (3) சட்டம் (4) விமர்சனம்

09. அறம், பொருள், இன்பம், வீடுபேறு எனபஎவற்றைக் குறிக்கும் **தொகைப்பெயர்**

(1) நாற்பொருள் (2) நால்வேதம் (3) நாற்குணம் (4) நான்மறை

10. பின்வருவனவற்றுள் **'**கன்று' என்ற இளமைப் பெயரோடு **பொருந்தாதது**

(1) வாழை (2) மான் (3) பசு (4) சிங்கம்

11. 'வயிறு கடித்தல்' எனும் **மரபுத்தொடர்** உணர்த்தும் பொருள்

(1) பசி உண்டாதல் (2) வயிறு வீங்குதல் (3) வயிறு வலித்தல் (4) வயிற்றில் அடித்தல்

12. ஒத்த பொருள் தரும் சொற்களால் அமைந்த **இணைமொழி**

(1) ஆதி அந்தம் (2) இன்னார் இனியார் (3) ஏற்றத்தாழ்வு (4) ஏழை எளியவர்

13. உயிர் துறக்கும் துணிவுடன் வட திசை நோக்கி உண்ணாதிருத்தல்

(1) உபவாசம் (2) வடக்கிருத்தல் (3) திசை நோக்குதல் (4) பிடிவாதம் செய்தல்

14. **'**நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த**'** எனும் அருஞ்சொற்றொடர் உணர்த்தும் பொருள்

(1) கடின உழைப்பு (2) வேகமாக வேலை செய்தல்
(3) நிலத்தில் வியர்வை சிந்துதல் (4) நிலத்தை பண்படுத்தல்

15. 'கொடுக்காதவன் செல்வம் அழிந்து போகும்' எனும் பொருளை உணர்த்தும் **பழமொழி**

(1) கெடுகுடி சொற்கேளாது (2) எரிகிற வீட்டில் பிடுங்கியது இலாபம்
(3) ஈயார் தேட்டை தீயார் கொள்வார் (4) உண்ணாச் சொத்து மண்ணாயப் போகும்

16. பின்வருவனவற்றுள் **உவமைத்தொடர்**

(1) அடியற்ற மரம் போல (2) ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு
(3) வழிமேல் விழி வைத்து (4) கண் திறத்தல்

17. ஆத்திரத்தோடு நண்பர் அவுக்கென எழும்பி இரண்டில் ஒன்று பார்ப்பது என வந்தார். இங்கு **அவுக்கென** என்ற சொல் உணர்த்தும் பொருள்

(1) விரைவு (2) மிகுதி (3) கோபம் (4) மகிழ்ச்சி

18. இன்று மாணவன் சப்பாத்து அணிந்து வரவில்லை. இதில் **சப்பாத்து** என்பது

(1) பிரான்சிய மொழிச் சொல் (2) போர்த்துக்கேய மொழிச் சொல்
(3) ஒல்லாந்த மொழிச் சொல் (4) அரபு மொழிச் சொல்

19. பின்வருவனவற்றுள் நிகழ்கால இடைநிலையாக வருவது

(1) ப், வ் (2) த், ற் (3) கின்று, கிறு (4) இன், ன்

20. வேறுபட்ட புணர்ச்சி இடம்பெற்றுள்ள சொல்

(1) பழச்சாறு (2) பலாப்பழம் (3) பழக்குலை (4) பழச்சுவை

21 பின்வருவனவற்றுள் பண்புத்தொகையாக **அமையாதது**

(1) கயல்விழி (2) கருங்குதிரை (3) முக்கோணம் (4) வெண்தாமரை

22. பின்வருவனவற்றுள் வேற்றுமைப் பொருளால் **வேறுபடும்** தொடர்

(1) மரக்கிளை (2) வீட்டுச் சுவர் (3) கடற்கரை (4) மலைக்கோயில்

23. "எந்தையும் உடையேம்…" இங்கு உடையேம் என்பது

(1) தன்மை ஒருமை வினைமுற்று (2) படர்க்கை பன்மை வினைமுற்று
(3) தன்மை பன்மை வினைமுற்று (4) முன்னிலை பன்மை வினைமுற்று

24. அவன் மிகுந்த பொறுமைசாலி.
அவன் கோபம் கொள்ளமாட்டான்.

மேற்படி இரு வாக்கியங்களையும் இதே ஒழுங்கில் இணைப்பதற்கு பொருத்தமான **இணைப்பிடைச் சொல்**

(1) ஆனால் (2) ஆகையால் (3) ஆயினும் (4) எனினும்

25. பின்வருவனவற்றுள் **பொது வினையாக** அமைவது

(1) நனை (2) ஓடு (3) படி (4) நட

26. பின்வருவனவற்றுள் **இடைப்போலியாக** வருவது

(1) அரைசு (2) சாம்பர் (3) அய்யர் (4) அரன்

27. பின்வருவனவற்றுள் **ஆக்கப் பெயரடைக்கு** உதாரணமாக அமைவது

(1) சிறிய (2) வேகமாக (3) அழகான (4) நல்ல

28. வேகமாக நடந்து வந்த பெரியவர் ஓய்வு எடுக்க விரும்பினார். இவ்வாக்கியத்திலுள்ள **பெயரெச்சம்**

(1) நடந்து (2) எடுக்க (3) ஓய்வு (4) வந்த

- **பொருத்தமற்ற உதாரணம் இடம்பெற்றுள்ள சொற்றொகுதியைத் தெரிவு செய்க.**

29. (1) ஆக்கப்பெயர் - முதலாளி, முயற்சி, பணக்காரன்
(2) வினையாலனையும் பெயர் - வந்தவன், திட்டியவன், வராதவன்
(3) தொழிற்பெயர் - தேடல், கதைத்தல், பார்த்தேன்
(4) கூட்டுப்பெயர் - கண்காட்சி, எரிகல், இடிதாங்கி

30. (1) தனிவினை - ஓடு, அடிக்கிறார்கள், கண்டான்
(2) பிறவினை - செய்வித்தான், சாப்பிட்டான், படிப்பித்தார்
(3) எதிர்மறை வினை - ஓடாது, வரா, நிற்கமாட்டேன்
(4) முற்று வினை - படித்தேன், படிக்கிறான், ஆடினார்கள்

- **புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப்பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.**

31. அரச ஊழியர்களுக்கு புதுவருட பிறப்பை முன்னிட்டு ………………….. வழங்கப்பட்டது.

(1) சம்பளம் (2) சந்தாப் பணம் (3) முற்பணம் (4) கட்டுப்பணம்

32. நீதிமன்றத்திற்கு வந்து சாட்சியமளிக்குமாறு வைத்தியருக்கு …………………….. விடுக்கப்பட்டது.

(1) அழைப்பானை (2) பிடியானை (3) ஆலோசனை (4) ஆட்கொணர்வு மனு

33. கொடுத்த பொருளில் அடுத்த நொடியில் பாடும் கவி ……………………… எனப்படும்.

(1) ஆசு கவி (2) வசை கவி (3) அங்கதக் கவி (4) சிலேடைக் கவி

34. ஏற்றுமதியை அதிகரிப்பதன் மூலமாக நமது நாட்டின் .............................. அதிகரித்துக் கொள்ளலாம்.

(1) மானியத்தை (2) அந்நியசெலாவணியை (3) கடன் பெறுவதை (4) நிவாரணத்தை

35. சற்று முன் மாணவர்கள் வேகமாக ........................

(1) ஓடுவார்கள் (2) ஓடுகின்றனர் (3) ஓடினார்கள் (4) ஓடினார்

36. கடவுள் இரக்கம் காட்டினாலன்றி மழை ............................

(1) பெய்யும் (2) பெய்தது (3) பெய்கின்றது (4) பெய்யாது

- **கீழே தரப்பட்டுள்ள பாடலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக.**

தங்கத்தை உருக்கி விட்ட
வானோடை தன்னிலே ஓர்
செழுங்கதிர் மாணிக்கத்துச்
செழும்பழம் முழுகும் மாலை
செங்குத்தாய் உயர்ந்த குன்றின்
மரகதத் திருமேனிக்கு
மங்காத பவழம் போர்த்து
வைத்தது வையங் காண!

37. இப்பாடல் மூலம் கவிஞர், வருணிக்கும் நிலம்

(1) குறிஞ்சி (2) பாலை (3) முல்லை (4) மருதம்

38. இங்கு முழுகுவதாகக் குறிப்பிடப்படுவது

(1) சந்திரன் (2) சூரியன் (3) நட்சத்திரம் (4) மலை

39. இங்கு வையம் என்பதன் பொருள்

(1) பயம் (2) வானம் (3) மலை (4) உலகம்

40. கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்கு பெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்கேற்ற பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.

(அ) இதற்கு, எழுத முன்னரே தயார் செய்திருக்க வேண்டும்.

(ஆ) எடுத்துக்கொண்ட ஒரு பொருளைப்பற்றி எழுதத் தொடங்கு முன், அதைத் தழுவிய கருத்துக்கள் பல எழுதுபவரின் மனத்தில் எழ வேண்டும்.

(இ) அவ்வாறு அமைந்திருந்தால் தான் அது சிறந்த கட்டுரையாக வாசகர் மனதில் பதியும்.

(ஈ) "பானையில் இருந்தால்தான் அகப்பையில் வரும்" என்ற பழமொழி கட்டுரை வரைவோருக்கு மிகவும் பொருத்தமானதே.

(உ) அடிப்படையாகக் கற்றல், கேட்டல், சிந்தித்தல், அவதானித்தல் ஆகியன அமைந்திருக்க வேண்டும்.

(1) ஈ, ஆ, உ, இ, அ (2) ஆ, உ, இ, அ, ஈ (3) ஈ, ஆ, அ, உ, இ (4) ஈ, ஆ, அ, இ, உ

සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்
Sabaragamuwa Provincial Department of Education

| | |
|---|---|
| පෙරහුරු පරීක්ෂණය - 2022 | 11 ශ්‍රේණිය |
| முற் சோதனை - 2022 | தரம் 11 |
| Practice Tsest – 2022 | Grade 11 |

| | |
|---|---|
| දෙමළ භාෂාව හා සාහිත්‍යය - II | පැය 02 යි |
| தமிழ் மொழியும் இலக்கியமும் - II | 02 மணித்தியாலம் |
| Tamil Language & Literature - II | 02 Hours |

**கவனிக்க :**

(I) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.

(II) இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.

1) **சுருக்கமான விடை தருக.**

**I.** "மறையென லறியா மாயமி லாயமொடு..." எனும் சொற்றொடரைப் பிரித்தெழுதுக.

**II.** பின்வரும் வாக்கியத்துக்குப் பொருத்தமான நிறுத்தக் குறிகளை இட்டு, அதனை மீண்டும் எழுதுக.
உங்களுக்கு ஏதும் உதவி தேவையா என்று மழலையில் கேட்டார்.

**III.** அழ. வள்ளியப்பா குழந்தைப் பாடல்களைப் பாடினார்.
இச் செய்வினை வாக்கியத்தை செயப்பாட்டுவினை வாக்கியமாக மாற்றி எழுதுக.

**IV.** 'செத்தான்', 'கற்றான்' என்பவற்றின் வினையடிகள் எவை?

**V.** பின்வரும் வாக்கியத்தை மயக்கம் நீக்கி எழுதுக.
"தரமான இலங்கையில் தேயிலை மத்திய மலை நாட்டிலிருந்து கிடைக்கின்றது."

**VI.** 'மெழுகு' என்ற சொல் பெயராகவும் வினையாகவும் அமையுமாறு ஒவ்வொரு வாக்கியம் எழுதுக.

**VII.** "தன்னைத்தான் பார்த்து வெடித்துச் சிரிக்கிறது என் மனம்"
இவ் வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள எழுவாய் பயனிலையை இனங்கண்டு எழுதுக.

**VIII.** ஒரு நேர்முக வர்ணனையாளனுக்கு இருக்க வேண்டிய பண்பு அல்லாதது,
(அ) சரளமாகப் பேசும் திறன (ஆ) தெளிவான உச்சரிப்பு
(இ) தொனி வேறுபாடு (ஈ) அழகிய முகபாவனை

**IX.** பின்வரும் பேச்சு வழக்குத் தொடரை எழுத்து வழக்குத் தொடராக மாற்றி எழுதுக.
"நா வெரசா போறேன். நீங்க வாங்க."

**X.** 'நாளை வருவான் ஒரு மனிதன்' என்று நீலவாணன் பாடினார்.
இவ்வாக்கியத்தின் தலைமைத் தொடரையும் சார்பு நிலைத் தொடரையும் எழுதுக.

( 02 **X 10 = 20** புள்ளிகள் )

2) **பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக.**

**(I)** தற்போது எமது நாடு பாரிய பொருளாதார நெருக்கடியை சந்தித்துள்ளது. இதனாள் மனிதனின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றான உணவைப் பெற்றுக்கொள்வதில் மக்கள் பெரும் சிரமத்தை எதிர் கொள்கின்றனர். பலரும் போசனை குறைபாட்டால் அவதியுறுகின்றனர். முக்கியமாக எமது எதிர்கால சந்ததியினரின் சுபீட்சமான வாழ்வு கேள்விக்குறியாகி விடும். இது தொடர்பான ஒரு **விளக்கக் கட்டுரை.**

**(II)** இலங்கையில் இயற்கை அனர்த்தங்கள் அடிக்கடி நிகழ்கின்றன. இதனால் உயிர்ச் சேதங்கள், உடைமைச் சேதங்கள் என பேரிழப்புக்களைச் சந்திக்க வேண்டி ஏற்படுகின்றது. மனிதர்களின் செயற்பாடுகளே இவ் இயற்கை அனர்த்தங்களிற்கு காரணமாக அமைகின்றது என்பதனையும், இயற்கை அனர்த்தத்தை குறைத்துக்கொள்வதற்கு எடுக்க வேண்டிய விடயங்களையும் விளக்கி ஒரு **மேடைப்பேச்சு.**

**(III)** மாணவர்களின் கல்வியில் தாக்கத்தினை ஏற்படுத்தும் நிகழ்சிலைக் கல்வியின் நன்மை தீமைகளை கருத்திற்கொண்டு நன்மைகளே பெரிதும் ஏற்படுகின்றன எனக் கருதும் ஒருவருக்கும் தீமைகளே பெரிதும் ஏற்படுகின்றன எனக் கருதும் ஒருவருக்கும் இடையிலான ஒரு **உரையாடல்.**

**(IV)** "ஓ, என் அப்பா என்னை கீழே தள்ளிவிட்டார். முகஞ் சரிந்தது, நிலத்தின் மணலில், மெதுவாய் தட்டித் துடைத்துக்கொண்டு எழுந்தும் எழாமலும் நிற்கின்றேன். இப்படித்தான் தினமும் என்னையும் அம்மாவையும் குடித்துவிட்டு வந்து அடிப்பார்…." என்ற வகையில் தொடங்கி மதுவால் அழியும் ஒரு குடும்பத்தை விபரிக்கும் ஒரு **சிறுகதை.**

**( 25 புள்ளிகள் )**

3) **பின்வரும் உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 – 45 சொற்களில் அமையுமாறு எழுதுக.**

இன்றைய கால கட்டத்தில் தொடர்பாடல் என்பது மிகப் பிரபல்யமானதும் அவசியமானதுமான ஒரு செயற்பாடாகிவிட்டது. இன்று முழு உலகுமே ஒரு கிராமம் என்ற வகையில் சுருங்கி விட்டமைக்கும் நெருங்கி விட்டமைக்கும், இத் தொடர்பாடல் விருத்தியே அடிப்படைக் காரணமாகிவிட்டது எனலாம்.

பழமைமிக்க தொடர்பாடல் முறையான கடிதம் முதல் தொலைபேசி, தொலைநகல், தொலைப்பதிவு, மின்னஞ்சல் போன்ற பல்வேறு ஊடகங்களும் அகில உலகத்தையுமே ஆட்டிப்படைக்கின்றன. மேற்கூறப்பட்ட பல்வேறு வகையான சாதனங்கள் தோற்றம் பெற்றுவிட்ட போதும் மனிதப் பண்பும் நேயமும் மிக்க நேரடித் தொடர்பானது எல்லாவற்றிலும் மேலானது என்று கூறலாம். உயர்ந்த அறிவும் ஆற்றலும் விஞ்ஞானத்தில் வியத்தகு சாதனை போக்கும் மிக்க மனிதன் தனது நாளாந்த தொடர்பாடலை பண்புடனும் சிறப்புடனும் மேற்கொண்டு ஊடாடும், உறவாடும் தன்மைமைகளைத் தன்னுள் வளர்த்துக்கொள்ளல் மிக அவசியமானதாகும்.

எமது நாளாந்த வாழ்க்கையில் ஏற்படும் பல்வேறுப்பட்ட சந்தர்ப்பங்களின் போதும் நாம் பல்வேறுப்பட்டவர்களுடன் தொடர்புக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அத்தகைய தொடர்பாடலானது பல்வேறு மட்டங்களில் இடம்பெறக் கூடும். வயதில் கூடியோருடனோ குறைந்தோருடனோ சம வயது உடையோருடனோ இருக்கலாம். நம்மை விட அறிவிலும், ஆற்றலிலும், கல்வியிலும், செல்வத்திலும் சிறப்புப் பெற்றவர்களுடனும் இருக்கலாம். நமது நாட்டவர்களுடன் மட்டுமன்றி வேறு நாட்டவர்களுடனும் இருக்கலாம். இவ்வாறு பல்வேறுப்பட்டவர்களுடனும் நாம் தொடர்பாடல் கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்கள் நிகழ்காலத்தில் மட்டுமன்றி வருங்காலத்திலும் ஏற்படலாம். இதற்கு இசைவாக நாம் தொடர்பாடலைத் திறன்பட மேற்கொள்ளும் ஆற்றல், பண்பு என்பவற்றை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

**( 10 புள்ளிகள் )**

**4) பின்வரும் உரைநடைப் பகுதியை வாசித்து அதன்கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

தொல்காப்பியத்தின் மூன்றாவது பகுதி, பொருளதிகாரம். அதுவே தொல்காப்பியத்தின் உயிர்நிலை. 'எழுத்தும் சொல்லும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே! பொருளதிகாரம் பெறேமெனின் இவை பெற்றும் பெற்றிலேம்' என்று ஒரு குரல், கடைச்சங்ககாலத்துப் பாண்டியனொருவனின் வாயிலிருந்துக் கேட்கிறது. கடைச் சங்கத்துத் தலைமைப் புலவரான நக்கீரரே அக்குரலைப் பெருக்குகின்றார். அக் குரலிலிருந்து தொல்காப்பியத்திலே பொருளதிகாரம் எத்துணை அருமை படைத்தது என்பது அறியத்தக்கது. அது கடைச்சங்ககாலத்திலேயே அரிதானபோது, பத்தொன்பதாம் நூற்றாண்டிலே உயிர் தாங்கி வரும் என்று எவராயினும் எண்ணுவதெப்படி; எண்ணியதில்லை. தமிழ்நாடு முழுவதிலும் பொருளதிகார ஏடு ஒரு சிலவாய், அவையும் நெரிந்தும் முரிந்தும் சிதல்வாய்ப்பட்டும் சிதைந்து, இறுதி மூச்சு விடுவனவாயிருந்தன. 'செல்துளைத்த துளையன்றி மெய்ப்புள்ளி விரவாத சென்னாளேடு' என்று சொல்லிச் சொல்லி அவ்வேடுகளைத் தாமோதரம் பிள்ளை தமது உதிரக் கண்ணீரால் கழுவினார். பொருளதிகாரம் கிடைகக்கும் என்று எவரும் காத்திருக்கவில்லை. காத்திராப்பிரகாரம் ஒருநாள், 1885 ஆம் ஆண்டு சி.வை. தாமோதரம்பிள்ளை பதிப்பு, பொருளதிகார முதல் ஐந்தியல்கள் நச்சினார்க்கினியர் உரையோடும் அச்சு வாகனம் இவர்ந்து, தமிழ்நாட்டில் பவனி வந்தது.

**(I)** தொல்காப்பியத்தின் உயிர்நிலை எனக் குறிப்பிடப்படுவது யாது?

**(II)** நக்கீரரின் குரலாக ஒலித்தது யாது?

**(III)** பொருளதிகார ஏடு எவ்வாறான நிலையிலிருந்தது என்று குறிப்பிடப்படுகிறது?

**(IV)** சி. வை. தாமோதரம்பிள்ளை செய்த தமிழ்ப்பணி யாது?

**(V)** பொருளதிகாரத்தின் எத்தனை இயல்கள், யாரின் உரையோடு வெளிவந்தன?

( **10 புள்ளிகள்** )

**5)** உமது பிரதேசத்தின் வழியாக பாய்ந்தோடுகின்ற ஆறானது பல்வேறு வழிகளிலும் மாசுபடுகின்றது. இதனால் பிரதேசத்தில் வாழும் உயிரினங்களுக்கு பல்வேறு வழிகளிலும் அச்சுருத்தல் ஏற்பட்டுள்ளது. இதனை சுற்றுச் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் கவனத்திற்குக் கொண்டு வரும் வகையில் 100 சொற்களில் அமையுமாறு கடிதம் ஒன்று எழுதுக.

- குறித்த ஆறு மாசுபடுகின்ற வழிகள்
- அதனால் உயிரினங்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகள் என்பவற்றை சுட்டிக் காட்டுக.

அல்லது

சூழலை சுத்தமாக வைத்திருப்பதும், பாதுகாத்துக்கொள்வதும் மனிதனின் தலையாய கடமையாகும். இதிலிருந்து மனிதன் விலகும் பட்சத்திலே டெங்கு என்ற நோய் தலைவிரித்தாடுகின்றது. இப்பேராபத்தில் இருந்து பொது மக்களை பாதுகாக்கும் வகையிலும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் துண்டுப் பிரசுரம் ஒன்றை எழுதுக.

- டெங்கு நுளம்பு பரவ விடாமல் தடுக்கும் வழிமுறைகள்
- டெங்கு நோய்க்கான அறிகுறிகள்

( **15 புள்ளிகள்** )

සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்
Sabaragamuwa Provincial Department of Education

පෙරහුරු පරීක්ෂණය - 2022 | 11 ශ්‍රේණිය
முற் சோதனை - 2022 | தரம் 11
Practice Tsest – 2022 | Grade 11

දෙමළ භාෂාව හා සාහිත්‍යය - III | පැය 02 යි
தமிழ் மொழியும் இலக்கியமும் - III | 02 மணித்தியாலம்
Tamil Language & Literature - III | 02 Hours

**கவனிக்க :**

(I) அறிவுறுத்தல்களுக்கேற்ப **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

(II) **1, 2, 3, 4** ஆகிய வினாக்களுக்கும் **5, 6, 7** ஆகிய வினாக்களில் ஏதாவது **ஒரு** வினாவுக்கும் விடை எழுதுக.

(III) இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் **80** ஆகும்.

**1. சுருக்கமான விடை தருக.**

(I) “செழுங்குரங்கு தேமாவின் பழங்களைப் பந்தடிக்கும்
தேனலர் சண்பகவாசம் வானுலகில் வெடிக்கும்”

(அ) இங்கு செழுங்குரங்கு என்பதன் பொருள் யாது?
(ஆ) இரண்டாவது அடியில் பயன்படுத்தப்பட்டுள்ள அணி யாது?

(II) “காற்றெல்லாம் தேனிழைக்க
மலைமடியில் கண் வளர்த்தோம்”

(அ) இங்கு குறிப்பிடப்படும் மலையின் பெயர் என்ன?
(ஆ) கண் வளர்த்தோம் என்பதன் பொருள் யாது?

(III) “இந்த விசில் சத்தமே ஒரு வகை கிலியை உண்டு பண்ணும்”

(அ) இங்கு கிலி என்பதன் பொருள் யாது?
(ஆ) இவ்வாக்கியம் இடம்பெறும் சிறுகதையினுடைய ஆசிரியர் பெயரைக் குறிப்பிடுக.

(IV) “பதியிழந்தனம் பாலனை யிழந்தனம் படைத்த”

(அ) இவ்வடி இடம்பெறும் இலக்கியம் எது?
(ஆ) பதியையும் பாலனையும் இழந்ததாகக் குறிப்பிடப்படுபவர் யார்?

(V) “பொய்படும் ஒன்றோ புனைபூணும் கையறியாப்
பேதை வினைமேல் கொளின்”

(அ) பேதை என்பதன் பொருள் யாது?
(ஆ) இங்கு பேதையின் இயல்பாகக் குறிப்பிடப்படுவது எது?

(VI) “மதியி னிற்புலை நாத்திகங் கூறுவர்”

(அ) இவ்வடி பாரதியார் சுயசரிதையின் எப்பகுதியில் அமைந்தள்ளது?
(ஆ) நாத்திகம் என்பதன் பொரள் யாது?

(VII) "சினிமா மொழியின் மூன்றாவது முக்கிய அம்சம் படத்தொகுப்பு"

(அ) சினிமா மொழியின் முதல் இரு அம்சங்களும் எவை?
(ஆ) படத்தொகுப்பு என்பது யாது?

(VIII) "யாமிரப்பவை பொருளும் பொன்னும் போகமுமல்ல, அன்பால்
அன்பும் அருளும் அறனும் மூன்றும்"

(அ) இப்பாடலடி இடம்பெறும் நூல் எது?
(ஆ) இவ்வடிகள் உணர்த்தும் தமிழரின் பண்பாடு எது?

(IX) "எட்டுணை யானும் இரவாது தான் ஈதல்
எத்துணையும் ஆற்றல் இனிது"

(அ) 'ஈதல்' என்பதன் பொருள் யாது?
(ஆ) இவ்வடிகள் உணர்த்தும் நற்கருத்து யாது?

(X) "கம்பியூட்டர் வாங்கும்போது நாங்கள் என்ன பாவிப்புக்கு அதை வாங்குகிறோம் என்பதை நிச்சியிக்க வேண்டும்"

(அ) இவ்வாறு கூறியவர் யார்?
(ஆ) எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?

( 02 **X 10 = 20** புள்ளிகள் )

**2. பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

(I) தெள்ளியவாலின் சிறுபழத்தொருவிதை
தெண்ணீர் கயத்துட் சிறுமீன் சினையினும்
நுண்ணிதேயாயினும் அண்ணல்யானை
அணிதேர்புரவி யாட்பெரும்படையொடு
மன்னர்க்கிருக்க நிழலாகும்மே

அதனால்
பெரியோரெல்லாம் பெரியருமல்லர்
சிரியோரெல்லாம்
சிரியருமல்லர்

(அ) இப்பாடலில் கூறப்படும் நாற்படைகளும் எவை?
(ஆ) அண்ணல் யானை, அணிதேர் என்பனவற்றின் பொருள் யாது?

(II) வயிரம் எனும் சுடு நெருப்பை மிக மூட்டி
வளர்க்கின் உயர் வரைக்காடு என்ன
செயிர் அமரில் வெகுளி பொர சேர இரு
திறத்தேமும் சென்று மாள்வோம்
கயிரவமும் தாமரையும் கமழ்பழனக்
குருநாட்டில் கலந்து வாழ
உயிர் அனையாய் சந்துபட உரைத்தருள் என்றான்
அறத்தின் உருவம் போல்வான்

(அ) இப்பாடலில் கூறப்படும் குரு நாட்டின் சிறப்பு யாது?
(ஆ) இப்பாடல் மூலம் தருமன் கண்ணனுக்கு எடுத்துரைக்கும் செய்தி யாது?

(III) ஆடிக் குடத்தடையு மாடும்போ தேஇரையும்
மூடித் திறக்கின் முகங்காட்டும் - ஓடிமண்டை
பற்றிற் பரபரெனும் பாரிற்பிண் ணாக்குமுண்டாம்
உற்றிடுபாம் பெள்ளெனவே யோது

(அ) இங்கு சிலேடையாக எடுத்துக் காட்டப்படும் இரு பொருள்களும் எவை?
(ஆ) சிலேடை பயன்படுத்தப்பட்டுள்ள விததிற்கு ஓர் உதாரணம் தருக.

(IV) சென்னை சர்வகலாசாலையார் முதன் முதல் நடத்திய பி.ஏ. பரீட்சையில் யாழ்ப்பாணத்தவர்கள் இருவர் இப்பரீட்சை எடுத்துச் சித்தி எய்தியவர்கள். ஒருவர் வை. விசுவநாதப்பிள்ளை மற்றவர் சி.வை. தாமோதரம்பிள்ளை. விசுவநாத பிள்ளை மகா விவேகி; கணித மேதை; தாமோதரம் பிள்ளைக்கு ஆசிரியர்; வாதஞ் செய்வதில் சாமர்த்தியவான். நாவலர் அவர்களுக்கு இரண்டு ஆண்டுகள் மூத்தவர். நாவலர் அவர்களும் பிள்ளையும் இளமை தொடக்கம் பத்திகை வாயிலாகப் பல விஷயங்களில் வாதஞ் செய்து வந்தவர்கள். நாவலர் அவர்களை எதிர்த்து நின்று பல கண்டனப் பத்திரிகைகள் பதித்து வெளியிட்டவர், இந்த விசுவநாதபிள்ளை. இவர் ஒரு முறை சிதம்பரத்திலே நாவலர் அவர்களோடு நேரில் வாதஞ் செய்து நாவலரின் கொள்கைகளுக்கு இணங்கி அவர்களிடம் மதிப்பு வைத்து அன்று தொடக்கம் நாவலர் அவர்களை குருவாகக் கொண்டவர்.

(அ) வை. விசுவநாதப்பிள்ளையினதும் சி.வை. தாமோதரம்பிள்ளையினதும் சிறப்பாகக் கூறப்படுவது எது?
(ஆ) வை. விசுவநாதப்பிள்ளைக்கும் நாவலருக்கும் இடையிலான உறவு எவ்வாறு எடுத்துக் காட்டப்படுகிறது?

(V) பக்திப் பண்பினை ஏனைய தமிழ்க் கலைகளிலும் காணலாம். தஞ்சாவூரப் பெரிய கோவில், கங்கை கொண்ட சோழபுரம், இசைக்கலை, பரத நாட்டியம் போன்றவை பக்தியால் இயற்றப் பெற்றவை அல்லது பக்தியால் வளர்ச்சியுற்றவை. இப்பக்தி பிற நாடுகளுக்கும் பரவியது. இந்தோனேசியாவிலிருக்கும் பிறம்பாணான் பானாத்தரான் கோயில்கள், கம்புச்சியாவிலிருக்கும் சில அரண்மனைகள், சிற்பங்கள், தாய்லாந்தில் கொண்டாடப்படும் திருவெம்பாவைத் திருநாள் இத்தமிழ்ப் பக்தியின் பயனென்றே கூற வேண்டும். உலகம் போற்றும் ஆடவல்லாரின் வடிவம் இப்பக்தியின் பயனென்பதை யார் மறுப்பார்? தமிழர் பண்பாட பிற நாடுகளுக்கு பரவுவதற்குப் பல்லவச் சோழர் படைவீரம் மட்டுமல்ல இப்பக்தியும் காரணமாக அமைந்தது.

(அ) இங்கு பக்தியால் வளர்ச்சிப்பெற்ற கலைகளாகக் குறிப்பிடப்படுபவை எவை?
(ஆ) தழிழர் பண்பாடு பிற நாடுகளுக்கு பரவ காரணமாக அமைந்தவை எவை?

**( 04 X 05 = 20 புள்ளிகள் )**

3. **நாட்டார் பாடல்கள்** என்ற பாடத்தை ஆதாரமாகக் கொண்டு,

(அ) மீனவப் பாடலில் மீனவர்களின் உழைப்பும் நம்பிக்கையும் வெளிப்படுத்தப்படும் விதம்
(ஆ) காதற்பாட்டில் காதலி மீதான அன்பு வெளிக்காட்டப்படும் விதம்

என்பனவற்றை விளக்குக.

**அல்லது**

**தற்கால கவிதைகள்** என்ற பகுதியில்,

(அ) 'குழந்தையென எனது மனம் குதூகலிக்கும்' எனும் கவிதையில் கவிஞரை குதூகலம் கொள்ளச் செய்யும் விடயங்கள்

(ஆ) 'தேயிலைத் தோட்டத்திலே' என்ற கவிதையில் மலையகத் தேயிலைத் வேலை செய்யும் பெருந்தோட்ட தொழிலாளர்களின் அவல நிலை

என்பன புலப்படுமாற்றை விளக்குக.

**( 15 புள்ளிகள் )**

4. **குகப்படலத்தில்**

(அ) கைகேயியைப் பற்றி ஆசிரியர் கூற்றாக இடம்பெறும் விடயங்கள்
(ஆ) பரதனின் குணப்பண்புகள்

என்பன விபரிக்கப்படுமாற்றினை தெளிவுப்படுத்துக.

**அல்லது**

**தத்தைவிடு தூது** பகுதியில்

(அ) பெண் அடிமைத்தனம்
(ஆ) காதலி மீது காதலன் கொண்டுள்ள காதல் உணர்வு

என்பன வெளிப்படுமாற்றை விளக்குக.

**( 15 புள்ளிகள் )**

- **5, 6, 7** ஆகிய வினாக்களுள் ஏதாவது **ஒன்றைத்** தெரிவுசெய்து விடை எழுதுக.

5. **சங்கப் பாடல்கள்** என்ற பகுதியில்,

(அ) **குறுந்தொகை** பாடலில் தலைவி இன்பமுற்றமை காட்டப்படும் விதம்
(ஆ) **புறநானூற்றுப்** பகுதியில் இளமைப் பருவத்தின் செயற்பாடுகள்

ஆகியன எடுத்துக் காட்டப்படும் விதத்தை விளக்குக.

**( 10 புள்ளிகள் )**

6. **கம்பியூட்டர்** என்ற சிறுகதையில் பிரதான கதாப்பாத்திரங்கள் சித்திரிக்கப்படுமாற்றினை விளக்குக.

**( 10 புள்ளிகள் )**

7. **இலட்சியமும் சமநோக்கும்** என்ற கட்டுரையை ஆதாரமாகக் கொண்டு இலக்கியங்களின் கதாபாத்திரங்கள் வாயிலாக, இலட்சியங்கள் எடுத்துரைக்கப்படுமாற்றினை விளக்குக.

**( 10 புள்ளிகள் )**